# 28. பொதுவிநியோக முறை

ஊராட்சித் தலைவர்கள் அவ்வூராட்சியிலுள்ள நியாய விலைக் கடைகளை ஆய்வு செய்யும் பொருட்டு ஊராட்சி அளவிலான குழுவில் ஒரு உறுப்பினராக இருப்பதற்கும், ஊராட்சி உறுப்பினர்கள் மற்றும் தலைவர்கள் நியாய விலைக் கடைகளை பார்வையிடுதல், குறைகள் ஏதும் காணப்பட்டால் மாநில மற்றும் வருவாய் கோட்ட அளவிலான அமைப்புகளுக்கு தெரிவித்தல் போன்ற பொறுப்புக்களை அரசாணை எண்.75, ஊரக வளர்ச்சித் துறை, நாள் 14.3.97-ல் கிராம ஊராட்சிகளுக்கும், இக்கடைகளை பார்வையிடவும், குறைகள் தெரிவிக்க ஊராட்சி ஒன்றியங்களுக்கும் மற்றும் மாவட்ட ஊராட்சிகளுக்கும் அரசு ஆணை எண்.203, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 29.7.97-ல் அதிகாரமளிக்கப்பட்டுள்ளது. இப்பொருள் குறித்து மேலும் ஊராட்சி அமைப்புகளுக்கு பொறுப்புகளை வழங்க ஆராய்ந்த இக்குழு கீழ்க்கண்ட பரிந்துரைகளைச் செய்கிறது.

## கிராம ஊராட்சிகள்

1. பொது விநியோக முறை ஊராட்சியில் எந்தெந்த பகுதியில் நடைமுறைப்படுத்தப்பட வேண்டும் என்பதற்கான பகுதியை அடையாளம் காணல் மற்றும் வறுமைக்கோட்டிற்கு கீழே வாழும் குடும்பத்தினரைக் கண்டறிந்து, அப்பட்டியலை பெற்று கிராம சபையால் அதற்கு உரியவாறு ஏற்பளித்தல் மற்றும் பின்னேற்பு அளித்தல்.

2. பொது விநியோக முறைத் திட்டத்தின் கீழ் எளிதில் கிடைக்கும் இன்றியமையாப் பொருட்களின் நடமாட்டம், தேவை ஆகியவற்றை மதிப்பிட்டு கடைகளில் பொருட்களின் இருப்பு விவரம், விலை விவரம் மாதத்திற்கு ஒருவருக்கு வழங்கக்கூடிய விநியோக அளவு, பொருட்கள் வாங்கக்கூடிய காலங்கள் போன்ற விவரங்களை மக்களுக்கு தெரியப்படுத்தல். உணவுப் பொருட்கள் இடையூறு இன்றி மக்களுக்கு கிடைப்பதற்கான அதற்கான சாத்தியகூறுகளை ஆய்வு செய்து ஒருங்கிணைத்தல். பொருட்களின் கூடுதல் தேவையை உள்ளூர் மக்களின் தேவைக்கேற்ப கண்டறிந்து உரிய அதிகாரிகளிடம் தெரிவித்தல்.

3. கிராம ஊராட்சிகள் நியாய விலைக்கடைகளை நடத்தி பராமரித்தல் அல்லது பகுதிநேர நியாய விலைக்கடைகளை அமைக்க அதற்கான இடத்தை தேர்ந்தெடுத்தல்.

4. உணவுப் பொருளை சேமித்து வைத்தல் மற்றும் பொது விநியோக முறையை முறைப்படுத்துதல், புதிய குடும்ப அட்டைகளை வழங்க உதவுதல் மற்றும் போலி குடும்ப அட்டைகளை அடையாளங்கண்டு ஒழித்தல்.

5. நியாய விலைக்கடைகள் மற்றும் பொது விநியோக முறை தொடர்பாக பொதுமக்களிடம் நம்பிக்கையை ஏற்படுத்திட அவற்றின் செயல்பாடுகளை உயர்த்துதல் மற்றும் மக்களின் பொது விநியோக முறை தொடர்பான குறைகளை தீர்த்தல். கிராம அளவில் பொது விநியோக முறையில் குறைகளுக்கான தீர்வு காண விசாரணைக்குழு அமைத்து நியாய விலைக்டைகளில் திடீர் சோதனை செய்து ஒழுங்கீனங்கள், முறைகேடுகளை கண்டறிந்து அவற்றை வட்டார வழங்கல் அதிகாரிகளிடம் அல்லது ஊராட்சி

ஒன்றியத்திடம் தெரிவித்தல்.

6. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், தீவிரமான வேலைவாய்ப்புத் திட்டம், வேலை உறுதி அளிப்புத் திட்டம் முதலான வறுமை ஒழிப்புத் திட்டங்களுடன் பொது விநியோக முறை தொடர்பு படுத்தி அல்லது ஒருங்கிணைத்து செயல்படுத்துதல். இத்திட்டங்களுக்கு தேவையான உணவு தானியங்களின் அளவினை மதிப்பிட்டு அவற்றை பயனடைவோருக்கு பிரித்து வழங்கிட உதவுதல். அத்தானியங்களின் தரத்தினை கவனித்து ஒழுங்கீனங்களையும், முறைகேடுகளையும் கண்டுபிடித்து அவற்றை சரிசெய்வதற்கான நடவடிக்கைகளை எடுத்தல்.

7. பொதுவிநியோக முறை நுகர்வோர்களுடன் மிகவும் தொடர்புடைய துறையாகும். எனவே கிராம ஊராட்சிகள் நுகர்வோர் பாதுகாப்பு கல்வி மற்றும் நுகர்வோர் உரிமைகள் பற்றிய விவரங்களில் கவனம் செலுத்தி அது தொடர்பான செய்திகளை அச்சிட்டு வழங்குதல் மற்றும் காட்சிக்கு வைத்தல்.

8. பொதுவிநியோக முறையில் புதிய நியாய விலைக்கடைகள் மற்றும் பகுதிநேர நியாய விலைக் கடைகளை திறக்க உதவுதல் மற்றும் அக்கடைகளைப் பராமரித்தல்.

## ஊராட்சி ஒன்றியங்கள்

1. பொது விநியோக முறைக்கான பகுதியை அடையாளம் கண்டறிதல், கிராம ஊராட்சிகளுக்கு வறுமைக் கோட்டிற்குக் கீழ் வசிப்பவர்களை அடையாளம் காண வழிகாட்டியும் ஒருங்கிணைந்தும் செயல்படல்.

2. பொது விநியோகத் திட்டத்தில் எளிதில் கிடைக்கக்கூடிய மற்றும் இன்றியமையாய் பொருட்களின் நடமாட்டம், தேவை ஆகியவற்றை மதிப்பிடுதல். இன்றியமையாப் பொருட்கள் தடங்களின்றி கிடைப்பதற்கு உதவுதல் இது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு உதவிடல்.

3. பொதுவிநியோக திட்டத்தில் இன்றியமையா பொருட்களின் போக்குவரத்து, அவற்றை சேமித்து வைத்தல் மற்றும் விநியோக முறை ஊராட்சிகளில்

ஒருங்கிணைந்து செயல்படல். புதிய நியாயவிலைக்கடைகளை ஊராட்சி ஒன்றிய அதிகார எல்லையில் திறக்க ஒருங்கிணைப்பு ஏற்படுத்தி உதவுதல். பொது விநியோக முறைக்குத் தேவையான சேமிப்பு கிடங்குகள் அமைக்க இடத்தை தேர்ந்தெடுக்க உதவுதல். ஊராட்சிகளில் புதிய குடும்ப அட்டைகள் வழங்க மற்றும் போலி அட்டைகளை நீக்கவும் வழிகாட்டுதல்.

4. பொது விநியோக முறை சிறப்பாக நடைபெற ஊராட்சி ஒன்றிய அளவில் குழு அமைத்து மேற்பார்வையிட்டு பொது விநியோக முறைக்கு மக்கள் மத்தியில் நம்பிக்கையை ஏற்படுத்துதல். பொது விநியோக முறைக்கு வழங்கும் பொருட்களின் விவரங்களை தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், வட்டார வழங்கல் அலுவலகம் மற்றும் பிற அலுவலகங்களிடமிருந்து பெறுதல்.

5. குறிப்பிட்ட காலத்திற்கு ஒருமுறை ஊராட்சிகளிடமிருந்து பொது விநியோக முறை தொடர்பாக அறிக்கை பெற்று அதனை ஆய்வு செய்து மேல்நடவடிக்கை எடுத்தல்.

6. ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், தீவிர ஜவஹர் வேலை வாய்ப்புத் திட்டம், வேலை உறுதியளிப்பது திட்டம் முதலான வறுமை ஒழிப்புத் திட்டங்களுடன் பொது விநியோக முறையை தொடர்பு படுத்தி கூலியின் ஒரு பகுதியாக வழங்கக்கூடிய உணவு தானியங்களை வழங்கல்.

7. நுகர்வோர் பாதுகாப்பு தொடர்பான கல்வி, நுகர்வோர் ஊக்குவிப்புப் பணிகளுக்கு ஊராட்சிகளுக்கு உதவி செய்தல்.

8. பொது விநியோக முறையில் புதிய நியாய விலைக்கடைகளை திறக்க ஊராட்சிகளுக்கு அறிவுரை வழங்கல் மற்றும் ஆய்வு செய்தல்.

9. பகுதிநேர நியாய விலைக்கடைகளின் செயல்பாட்டினை ஆய்வு செய்தல்.

10. ஊராட்சி ஒன்றியப்பகுதிகளில் நுகர்வோர் கல்வி மற்றும் பாதுகாப்புக்கான உதவிகளைச் செய்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

## மாவட்ட ஊராட்சிகள்

1. பொது விநியோக முறையின் கீழ் மாவட்டத்தில் புதிய நியாய விலை கடைகளையும், பகுதிநேர நியாய விலைக் கடைகளையும் திறக்க திட்டமிடுதல் மற்றும் ஆய்வு செய்தல்.

2. நுகர்வோர் கல்வி மற்றும் நுகர்வோர் பாதுகாப்புக்கான உதவிகளைச் செய்தல் நுகர்வோர் கல்வி மற்றும் பாதுகாப்புத் திட்டங்களின் செயல்பாடுகளை பார்வையிடுதல் மற்றும் ஆய்வு.